புதுக்குடியிருப்பு பிரதேசசபை

முல்லைத்தீவு மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசம்பர் 30 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2013 நிதியாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | | - | | | |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 2இ473இ550 | 02 | 16இ639இ639 | 01 | 143இ455 |
| விடுபட்ட தவறு | - | | 01 | 812இ308 | | |

ii. சபைக்கு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் நன்கொடையாக வழங்கப்பட்ட 13 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகுளில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களினதும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 33இ940இ406 பெறுமதியுடைய 03 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

-------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| <u>சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு</u> | <u>விபரம்</u> |
|---|---|
| <u>(அ)1988ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதிநிர்வாக ஒழுங்கு விதி</u> | |
| (ள)அத்தியாயம் ஐஐஐ பிரிவு 66 | ரூபா 13இ332இ836 வருமான நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (வை)நிதி ஒழுங்குவிதி 234 | மாற்றப்படாத 03 காசோலைகள் ரூபா 5478 நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (வை)நிதி ஒழுங்குவிதி 571 | காலங்கடந்த கேள்வி வைப்புக்கள் ரூபா 414இ000 நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)2012ம் ஆண்டின் 14ம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டம் | பெறுமதிசேர்வரி ரூபா 157இ833 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப் பட்டுள்ளது. |
| (இ)1983ம் ஆண்டின் 24ம் இலக்க விதவை அனாதை ஓய்வூதிய பங்களிப்பு | மீளாய்வாண்டில் அலுவலர்களினால் செலுத்தப் பட்ட விதவை அனாதைகள் பங்களிப்பு ரூபா 4இ340 விதவை அனாதை திணைக்களத்திற்கு அனுப்பப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 23இ567 விளைந்திருப்பதுடன் ஒப்பிடும் போது நேரொப்பான முன்னைய ஆண்டில் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7இ490இ686 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

-----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 10இ559இ796 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 17இ958இ105 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 25 | 90 | - |
| குத்தகை வாடகைகள் | 8,646 | 9,766 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,948 | 2,559 | - |
| வேறு வருமானங்கள் | 29,473 | 18,208 | 13,332 |
| | 41,092 | 30,623 | 13,332 |

### 2.3.2 வருமான முகாமைத்துவம்

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் சபைக்கு சொந்தமான முறிகண்டி கடைகளில் அறவிட வேண்டிய வாடகைகள் ரூபா 858,023 நிலுவையினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

-------------------------------------------------------

உரிமக் கட்டணங்கள் பெறப்படும்போது மட்டுமே வருமானமாக கணக்கிடப்படுகின்றது. பெறவேண்டிய வருமதிகள் கணக்கிற்கு கொண்டு வரப் பட்டிருக்கவில்லை.

(இ) நீதிமன்றத் தண்டப்பணங்கள்

--------------------------------------------------

மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்களும் குற்றப்பணங்களும் ரூபா 11,585,763 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முத்திரைத்தீர்வை கட்டணங்கள்

-----------------------------------------------------.

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் ரூபா 484,600 பெறுமதியான முத்திரைத்தீர்வை கட்டணங்கள் வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப் பட்டிருக்கவில்லை.

2.4 அறவிட வேண்டிய பதவியினர் கடன்

--------------------------------------------------------

இறந்த இளைப்பாறிய 2 அலுவலர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 97இ775 அறிக்கையிடும் திகதி வரையும்

பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2..5 சொத்து முகாமைத்துவம்

---------------------------------------

கணிப்பீட்டுசபை அறிக்கையினை இருப்பு பதிவேட்டுடன் ஒப்பீடு செய்தபோது 04 எண்ணிக்கையான் பொருட்கள் பற்றாக்குறையாகவும் 02 எண்ணிக்கையான பொருட்கள மிகையாகவும் காணப்படுகின்றது.

2.6 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டில் நிறைவேற்ற வேண்டிய ரூபா 556,962 பெறுமதியான 2 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு மூலதன செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தும் அறிக்கையிடும் திகதி வரையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

பின்வரும் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

1. வைப்புக்கள்
2. சில்லறைக்கடள் கொடுத்தோர்
3. முற்பணங்கள்
4. வருமான சேகரிப்பு
5. பாதீடு